**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**அசல் வழக்கு எண்.96/2010**

நாள்: 06.02.2026.

பெயர்: ராவணன் (வா.சா.2) த/பெ: சேதுராமன்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை...</u>

எனது தந்தை வழி தாத்தா பெயர் செல்வையன். எனது தந்தை சேதுராமன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதியின் கணவர் பெயர் ஜெயராமன். மேற்படி ஜெயராமன் தந்தை பெயர் மகாராஜன். தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் ஞாபகம் இல்லை. தாவா சொத்தின் விஸ்தீரணம் ஏர்ஸ் கணக்கில் என்ன என்றால் தெரியாது, செண்ட் கணக்கில் தான் தெரியும், அது 5 செண்ட் ஆகும். தாவா சொத்தில் புளியமரம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி புளியமரத்தின் கீழ் கூரைகுடிசை உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி புளியமரத்தின் கீழ் ஏற்கனவே இருந்த கூரைகுடிசை தற்போது என்ன ஆனது என்றால் எனது நினைவு தெரிந்த நாள்முதல் அங்கு கூரைகுடிசை இல்லை. எனது தாத்தாவிற்கு எவ்வளவு சொத்து இருந்தது என்றால், கேள்வி வழக்கிற்கு சம்மந்தமில்லாததால் என்னால் பதில் சொல்ல விருப்பமில்லை. எனது தாத்தா செல்வையா எத்தனை நபர்களுக்கு கடன் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு சொல்ல விருப்பமில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தை பொறுத்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் எத்தனை அயிட்ட சொத்துக்கள் கட்டுப்பட்டிருக்கிறது என்றால் எனக்கு தெரியாது. எனது சகோதரர் பத்மநாதனுக்கு தான் தெரியும். மேற்படி பத்மநாதன் இவ்வழக்கில் வா.சா.1 ஆவார். எங்கள் தரப்பில் இவ்வழக்கில் என்ன என்ன ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ.1 ஆவணம் ஜெயராமனின் தந்தை மகாராஜன் என்பவர் எனது தாத்தா செல்வையா என்பவருக்கு எழுதிக்கொடுத்தது. வா.சா.ஆ.1 மகாராஜன் என்பவர் எனது தாத்தாவிடம் பெற்ற கடனுக்காக எனது தாத்தாவிற்கு எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல, அது கிரையமாக தான் கொடுக்கப்பட்டது. வா.சா.ஆ.1

கடனுக்காக கொடுக்கப்பட்டுள்ளுதால் அதில் கண்ட சொத்துக்களை மகாராஜன் தான் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல, நாங்கள் தான் அனுபவித்து வந்தோம். தாவா சொத்திற்கு பட்டா ஏற்கனவே 373 என்ற எண்ணில் இருந்தது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. பிரதிவாதி தாக்கல் செய்த ஆவணங்கள் பற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பட்டா எண்.373 ற்கு எனது தாத்தாவோ எனது தந்தையோ நில வரி செலுத்தியுள்ளாரா என்றால் தெரியாது. தாவா சொத்தில் ஏற்கனவே இருந்த வீட்டின் எண்.1/21 என்றால் அதில் வீடு ஏதும் இருந்ததில்லை. மகாராஜன் இறந்த பிறகு அவரது சொத்தை அவரது மகன் ஜெயராமன் அனுபவித்து வந்தார் என்றால் இல்லை. ஜெயராமனுக்கும், பிரதிவாதிக்கும் திருமணம் நடந்த பிறகு இருவரும் தாவா சொத்தில் இருந்த வீட்டில் குடியிருந்த வந்தனர் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் மகள் பெயர் சுதா. மேற்படி சுதாவிற்கு ஆனந்த செல்வன், வாசுபாரதி ஆகியோர் குழந்தைகள் என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதியின் மகள் சுதா இறந்துவிட்டார். வல்லம் கிராமத்தைச் சேர்ந்த ராமசாமி மகன் முத்துவேல் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களை பொறுத்த வில்லங்க விவரங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதி 27.03.2001ம் தேதியில் மேற்படி முத்துவேல் என்பவரிடம் ரூ.20,000/— கடனாக பெற்று கொண்டு அதற்கு ஈடாக தாவா சொத்தை பொறுத்து ஒரு கிரைய பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி கடனை பிரதிவாதி திரும்பி செலுத்தியபிறகு மேற்படி முத்துவேல் என்பவரிடமிருந்து தாவா சொத்தை 31.05.2004ல் மறுகிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. அவ்வாறு மறுகிரையம் பெறும் போதே பிரதிவாதி தனது பேரக்குழந்தைகளான ஆனந்தசெல்வம், வாசுபாரதி ஆகிய இருவர் பெயரில் தான் மறுகிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்து ஏற்கனவே ரயத்துவாரி பட்டா நிலம் என்றால் சரிதான். 1958ல் வா.சா.ஆ.1 எழுதப்பட்ட பிறகு 1961, 1962 ஆண்டுகளில் சர்வே செட்டில்மெண்டு நடந்தது என்றால் எனக்கு தெரியாது. 1993 முதல் 1995 வரை நத்தம் நில வரிதிட்ட சர்வே நடந்தது என்றால் எனக்கு தெரியாது. 1984, 1985 ஆண்டுகளில் நில வரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சர்வே

நடந்தது என்றால் எனக்கு தெரியாது. ரயத்துவாரி பட்டா சொத்தாக இருந்த தாவா சொத்து 1995 ல் நடந்த நத்தம் நிலவரித் திட்டத்தின் கீழ் நத்தம் என்று வகைபாடு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தை பொறுத்து நத்தம் நிலவரித் திட்டத்தின் கீழ் பட்டா யார் பெயரில் வழங்கப்பட்டது என்றால் எனது தந்தை சேதுராமன் பெயரில் வழங்கப்பட்டது. மேற்படி எனது தந்தைக்கு வழங்கப்பட்ட பட்டா என்ன என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. எனது தந்தை சேதுராமனுக்கு வழங்கப்பட்ட பட்டா எனது குடும்பத்தினரிடம் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி பட்டா எனது சகோதரர் பத்மநாபனிடம் உள்ளது. மேற்படி பட்டாவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு காரணம் என்ன என்றால் எனக்கு தெரியாது. நத்தம் நிலவரித் திட்டத்தின் கீழ் தாவா சொத்தைப் பொறுத்து எனது தந்தைக்கு பட்டா வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. நத்தம் நிலவரித் திட்டத்தின் கீழ் தாவா சொத்தைப் பொறுத்து பிரதிவாதி சீதா பெயருக்கு பட்டா எண்.76 வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது தந்தை 1ம் வாதி சேதுராமன் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி ஓய்வு பெற்றவர் என்றால் சரிதான். 2001ம் ஆண்டு எனது தந்தை பணியில் இருந்தார் என்றால் சரிதான். எனது தந்தை 1ம் வாதி கிராம நிர்வாக அலுவலராக இருந்ததால் அவரது செல்வாக்கை பயன்படுத்தி பிரதிவாதி பெயரில் இருந்த பட்டாவை பிரதிவாதிக்கு தெரியாமல் DK No.2632/2001ன் படி தனது பெயரில் மாற்றிக் கொண்டுவிட்டார் என்றால் அவ்வாறு அவர் மாற்றவில்லை. தாவா சொத்துக்கு கீழ்புறம் எனது குடும்பத்திற்கு சொந்தமான நிலங்கள் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு மேல்புறம் ரோடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி ரோட்டிலிருந்து தாவா சொத்து வழியாகதான் தாவா சொத்திற்கு கீழ்புறம் உள்ள எங்கள் சொத்திற்கு சென்று வருவோம் என்றால் இல்லை, வேறு வழி உள்ளது. தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு 2010 ஆண்டு தாவா சொத்தை பொறுத்து பிரதிவாதிக்கும், எனது தந்தைக்கும் இடையே பிரச்சனை நடந்தது என்றால் இல்லை. மேற்படி 2010 பிரச்சனையின் போது பிரதிவாதியை எனது தந்தை தாவா சொத்திலிருந்து பலவந்தமாக வெளியேற்ற முயற்சி செய்து வந்தார் என்றால் சரியல்ல. மேற்படி பிரச்சனை சம்மந்தமாக உடையார்பாளையம் கோட்டாட்சியரிடம் விசாரணை நடந்து

வந்தது என்றால் சரியல்ல. மேற்படி விசாரணையின் பெயரில் உடையார்பாளையம் கோட்டாட்சியர் 30.03.2010 ல் பிரதிவாதிக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று மாவட்ட கண்காணிப்பாளருக்கு பரிந்துரை செய்து உத்தரவிட்டார் என்றால் இல்லை. மேற்படி கோட்டாட்சியர் விசாரணையின் போதுதான் தாவா சொத்திற்கான பட்டா எனது தந்தை பெயரில் மாற்றப்பட்ட விவரம் பிரதிவாதிக்கு தெரிய வந்தது என்றால் சரியல்ல.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)**

ஒப்பம்/சே.ராவணன்/

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி, என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/ம.சி. கண்ணதாசன்/
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.